சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:171/2019

2024ம் ஆண்டு ஜனவரி திங்கள் 03ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் செல்வராஜ் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

03.01.2024

1) எனக்கு பாலவனத்தம் என்றால் சரிதான். தாவா சொத்து முதலில் 4ம் பிரதிவாதி கஞ்சம்மாளுக்கு பாத்தியப்பட்டது. கஞ்சம்மாளின் கணவர் பெயர் சுப்பாநாயக்கர். சுப்பாநாயக்கரின் தந்தை பெயர் கந்தசாமிநாயக்கர். கந்தசாமிநாயக்கருக்கு உடன்பிறந்தவர்கள் கதிர்வேல்நாயக்கர் மற்றும் துரைசாமிநாயக்கர் என்றால் கந்தசாமிநாயக்கருக்கும் கதிர்வேல்நாயக்கரும் உடன்பிறந்தவர்கள் என்று தெரியும். துரைசாமிநாயக்கரை பற்றி எனக்கு தெரியாது. துரைசாமிநாயக்கர் மகன் பால்ராஜ் பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தை நான்கிரையம் வாங்குவதற்கு முன்பே வீட்டுமனைகளாக பிரித்தேனா என்றால் இல்லை.

2) இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு ராஜம்மாள் எனக்கு ஒரு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் அஞ்சலக ஒப்புதல் அட்டையில் உள்ள கையெழுத்து

என்னுடையது தான். **<u>அஞ்சலக ஒப்புதல் அட்டை பி.வா.சா.ஆ 1 ஆகும்.</u>** நான் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்று கொண்டு அதை எனது வழக்கறிஞர் திரு சிவகுமரன் என்பவரிடம் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. ஆர்.சிவகுமரன் என்ற வழக்கறிஞர் எங்கள் ஊரை சேர்ந்தவர் தான். அவரை வழக்கு சம்மந்தமாக ஒருபோதும் சந்தித்தது இல்லை. பி.வா.சா.ஆ 1 ஆவணத்தில் கையெழுத்து போட்ட பிறகு தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினேன் என்றால் அது எனக்கு ஞாபகம் இல்லை. 2013 ஆண்டு கிரையம் வாங்கினேன்.

3) பிரதிவாதிகள் எதிர்வழக்குரையில் வழகது நிலுவையில் இருப்பதாகவும் தாவா சொத்தை கிரையம் வாங்க கூடாது என்று அறிவிப்பு அனுப்பியதாக சொல்லியிருக்கிறார் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் ஒரு பதில் அறிவிப்பு அனுப்பிய விவரத்தையும் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி பிரதிவாதி தாக்கல் செய்த எதிர்வழக்குரைக்கு மறுப்பு செய்து பதில் வழக்குரை எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. 1 முதல் 3 பிரதிவாதிகளின் தாயாருக்கு தாவா சொத்தில் பாதி பாகம் உள்ளது என்று தீர்ப்பான விவரத்தை தெரிந்து கொண்டேன் என்றால் வருவாய்துறையில் பட்டாமாறுதல் செய்யும் போது தெரிந்து கொண்டேன். 11.12.2012 அன்றே தீர்ப்பாகிவிட்டது என்றும் அந்த தீர்ப்பு தேதிக்கு பிறகு நான் வாங்கிய கிரையம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல.

4) நான் தாவா சொத்தை கிரையம் வாங்குவதற்கு முன்பே கல் ஊன்றி மனைகளாக பிரித்தேன் என்றும் அப்போதே தாவா சொத்தை கிரையம் வாங்க கூடாதுஎ ன்றும் பிரதிவாதிகள் எச்சரித்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. அவ்வாறு எச்சரிக்கப்பட்டதால் தான் நான் எனது பெயரில் கிரையம் வாங்காமல் தந்திரமாக என் மனைவி பெயரில் கிரையம் வாங்கினேன் என்றால் சரியல்ல. நானும் என் மனைவியும் ஒரே வீட்டில் தான் இருக்கிறோம். நான் பி.வா.சா.ஆ 1 ல் கையெழுத்து போட்டு வாங்கிய அறிவிப்பு பற்றிய விவரத்தை என் மனைவிடம் சொன்னேனா என்றால் ஞாபகம் இல்லை. என் மனைவி பெயரில்

கிரையம் பெற்ற சொத்திற்கு என் சம்பாத்திய பணத்தை கொடுத்தேன் என்றால் சரிதான். அதன் பிறகு தாவா சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டு அதை பிரித்தார் என்றால் அது எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதி கஞ்சம்மாளிடம் நான் முந்தைய வழக்கு பற்றி கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் நான் கேட்கவும் இல்லை அவர் சொல்லவும் இல்லை.

5) தாவா சொத்தை பிரதிவாதிகள் ஒப்படைவு பெற்று கொண்டார்கள் என்றால் அதை பற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் கிரையம் பெற்ற தேதிலிருந்து இன்று வரையிலும் 4 ம் பிரதிவாதியை பார்த்து பாகபிரிவினை வழக்கு சம்மந்தமாக எதுவும் கேட்டு தெரிந்து கொண்டேனாஎ ன்றால் இல்லை. 4 ம்பிரதிவாதி கஞ்சம்மாளிக்கு நான் தான் வழக்கறிஞர் அமைத்து கொடுத்தேன் என்றால் இல்லை. 4 ம் பிரதிவாதிக்கு யார் வழக்கறிஞர் என்று எனக்கு தெரியாது. 4 ம் பிரதிவாதிக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு என்னையும் கட்டுப்படுத்தும் அந்த தீர்ப்பை ரத்து செய்ய நான் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். நான்தாக்கல் செய்துள்ள பிராது சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. ராஜம்மாள் தாக்கல் செய்த OS No: 2/2012 பிராது நகல், முதல் நிலை தீர்ப்பு நகல். முதல்நிலை தீர்ப்பாணை நகல், இறுதிநிலை தீர்ப்பாணை நகல். ஆணையர் அறிக்கை நகல், ஒப்படைவு நகல் அனைத்தையும் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

6) 1 முதல் 3 பிரதிவாதிகள் பெயரில் பட்டாமாறுதலாகிவிட்டது என்றால் ச ரிதான். வா.சா.ஆ 15 அறிவிப்பு இந்த வழக்கு தாக்கல் செய்யதற்கு பிறகு அனுப்பப்பட்டது என்றால்ச ரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டதை காட்டக் கூடிய ஆவணம் என்றால் சரியல்ல. நான் வாங்கிய கிரையம் வழக்கு நிலுவையில் இருக்கும்போது வாங்கிய தோசத்தால் பாதிக்கப்பட்டது என்றால் சரியல்ல. சுப்பாநாயக்கர் ராஜம்மாளின் உடன்பிறந்த சகோதர் என்றால் சரிதான். வா.சா.ஆ 5 ஆவணம் ராஜம்மாளும், சுப்பாநாயக்கரும் ஒன்றாக இருந்த சமயத்தில்

போடப்பட்ட அடமான பத்திரம் என்றால் சரியல்ல. ராஜம்மாள் திருமணமான பிறகு அடமானம் வைத்துள்ளார். நான் கிரையம் வாங்கியபோது சுப்பையாநாயக்கருக்கு ராஜம்மாள் என்ற சகோதரி இருப்பது தெரியுமா என்றால் தெரியும். நான் ராஜம்மாளிடம் சென்று சொத்து கிரையம் வாங்குவது சம்மந்தமாக சொன்னேனா என்றால் இல்லை. சாட்சி தற்போது சொல்கிறார் ராஜம்மாள் என்ற சகோதரி இருப்பது இந்த வழக்கிற்கு பிறகு தான் தெரியும். நான் ராஜம்மாளை சந்தித்து பேசவே இல்லை.

7) வா.சா.ஆ 18 ஆவணத்தின் படி சொத்து சுப்பாநாயக்கருக்கு பாத்தியப்பட்டது. சுப்பாநாயக்கருக்கு அவரது தந்தை வழியில் கிடைத்த சொத்து என்றால் சரிதான். பூர்வீக சொத்தை தான் சுப்பாநாயக்கரும் அவரது உடன்பிறந்தவர்களும் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ 18 ஆவணத்தின்படி சுப்பாநாயக்கருக்கு தனித்து பாத்திய உரிமை வராது என்றால் சரியல்ல. வா.சா.ஆ 18 ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. OS No: 2/2012 வழக்கு பற்றிய விவரங்கள் எனக்கு எப்படி தெரியும்என்றால் பட்டாமாற்றம் முயன்றபோது வழக்கறிஞர் மூலம் தெரிந்து கொண்டேன். தாவா சொத்தில் எனக்கு உரிமையோ அனுபவமோ கிடையாது என்றும் வீண்வம்பிற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

4 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை இல்லை.

மறுவிசாரணை இல்லை.